## நீங்கள் உடனடி ஆபத்தில் இருந்தால்

1. போலீஸின் உதவிக்காக 911 என்ற எண்ணை அழையுங்கள். உங்களது மொழியைக் கூறுங்கள் மற்றும் அவர்கள் மொழிபெயர்ப்பாளர் ஒருவருடன் உங்களைத் தொலைபேசியில் உரையாட இணைப்பு கொடுப்பார்கள் அல்லது “ஹெல்ப்” என்று கூறுங்கள்.
2. உங்கள் நம்பிக்கைக்குரிய மருத்துவர், இஎஸ்எல் (ESL) ஆசிரியர், உங்கள் நல வாழ்வுப் பணியாளர், நண்பர், உறவினர், அண்டைவீட்டுக்காரர் அல்லது உங்களது சமுதாயப் பணியாளர் போன்ற யாராகவும் இருக்கலாம்.

## ஆதார வளங்கள்

இந்த ஆதார வளங்களில் உங்களுக்குத் துணை புரிவதற்காக ஒரு தமிழ் மொழி பெயர்ப்பாளரைக் கேளுங்கள்:

வீட்டு வன்முறை மீதான ஆரோக்கிய ஆதார வள மையம் 1 (888) 792-2873

பாலியல் தாக்குதல் தேசிய அவசரத் தொலை தொடர்பு 1 (800) 656-4673

துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பெண்களுக்கான வசிப்பிடம்
*www.shelternet.ca* 1 (866) 693-3318

மறுதலிப்பு: இந்த பிரசுரமானது பொதுவான தகவல்களையே கொண்டுள்ளது. உங்களது குறிப்பிட்ட நிலைமை பற்றிய சட்டபூர்வ அறிவுரையைப் பெறுவதற்கு இது மாற்று அல்ல.

இந்த திட்டமானது சிட்டிசன்ஷிப் அன்ட் இமிக்ரேஷன் கனடாவினால் பெருமிதத்துடன் நிதியளிக்கப்பட்டது ஆகும்.

Citizenship and Immigration Canada | Citoyenneté et Immigration Canada

ஃபேமிலி சர்வீஸ் டொரோண்டோ நிறுவனமானது, டொரொண்டோ, ஒன்டேரியோவின் ரெக்ஸ்டேல் விமன்ஸ் சென்டரை, அவர்களது சமுதாயப் பங்குதாரர் ஆக ஆற்றிய பணிக்காக நன்றி தெரிவிக்க விரும்புகிறது.

FAMILY SERVICE TORONTO
For People. For Change.

RWC

TAMIL WOMEN

# இதை நான் முன்னரே அறிந்திருந்தால்...

## குடும்ப வன்முறை பற்றி பெண்கள், பெண்களிடம் பேசுவது



குடும்ப வன்முறை பற்றி பெண்கள், பெண்களிடம் பேசுவது

பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறையைத் தடுப்பதற்கான தகவல்கள் மற்றும் ஆதாரவளங்களை இந்த சிற்றேடு உங்களுக்கு வழங்குகிறது. இந்த பிரசுரங்கள் தமிழ் சமுதாயத்தினரால் தமிழ் சமுதாயத்திற்காக, பணிக்குழுக்கள் மற்றும் கவனக்குவிப்பு குழுக்களின் கலந்துரையாடல்கள் மூலமாகவும், ஜஸ்டிஸ் கனடாவின் இணையதளத் தகவல்கள் மூலமாகவும் உருவாக்கப்பட்டன.

## என் வாழ்க்கைத் துணைவரா இதைச் செய்வது?

வார்த்தைகளால் துன்புறுத்துவது

அவமதிப்பது, தரம் தாழ்த்துவது மற்றும் அவமானமூட்டும் நடத்தைகள்

பெற்றோர் மற்றும் நண்பர்களுடன் தொடர்பு கொள்வதைத் தடுப்பது

வீட்டு வருவாயைப் பெற முடியாமல் இருப்பது

உடல்ரீதியான வன்முறை

உங்களது குழந்தைகளை உங்களுக்கு எதிராகத் திருப்புவது

இந்த நடத்தைகளில் எவற்றையேனும் நீங்கள் அனுபவித்து வந்தால், உதவியை நாடுவதற்கு நீங்கள் அறிவுறுத்தப்படுகிறீர்கள், ஏனென்றால் நீங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடும் அல்லது துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடிய அபாயத்தில் இருக்கிறீர்கள். இந்த சிற்றேடில் துஷ்பிரயோகம் பற்றியும் உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்வதற்கும் அல்லது உதவியை எவ்வாறு நாடுவது என்பதற்கும் வேண்டிய முக்கிய தகவல்கள் உள்ளன.

## குடும்ப வன்முறை பற்றி கனேடிய அரசு என்ன சொல்கிறது?

“குடும்ப வன்முறை” வயது வந்தவர்கள் அல்லது குழந்தைகள் தங்களது வீட்டுச் சூழலில் அனுபவிக்கக்கூடிய பல்வேறு வகையான துஷ்பிரயோக வடிவங்களைக் கொண்டது. துஷ்பிரயோகம் என்பது ஒருவர் மற்றொரு நபரைக் கட்டுப்படுத்துவதற்கு அவனது அல்லது அவளது சக்தியைப் பயன்படுத்துவது ஆகும்.

வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள், தாங்கள் துஷ்பிரயோகத்தை அனுபவித்து வந்தால், போலீஸை அழைப்பதற்கு உரிமை உள்ளது. (சில கேஸ்களில், அந்த விஷயத்தில் போலீஸ் நுழைந்ததும்), பாதிக்கப்பட்டவரால் அந்த ஆய்வைத் தடுத்து நிறுத்தவோ, குற்றச்சாட்டுகளை மீளப் பெறவோ, அல்லது நீதிமன்ற நடவடிக்கைகளைக் கைவிடவோ முடியாமல் போகலாம். துஷ்பிரயோகம் செய்த அந்த நபரை போலீஸ் கைது செய்யவும், அடைத்து வைக்கவும், மற்றும் ஒரு கிரிமினல் குற்றச்சாட்டை அவர் மீது சாட்டவும் கூடும்.

கூடுதல் தகவல்களுக்கு, குடும்ப வன்முறைக்கு முன்முயற்சியாக உள்ள இந்த ஜஸ்டிஸ் கனடா இணையதளத்தை தயவுசெய்து பாருங்கள்:

*http://www.justice.gc.ca/eng/pi/fv-vf/rep-rap/spous-conju.html*

**துஷ்பிரயோகம் செய்த ஒரு நபர் இவ்வாறு குற்றம் சாட்டப்பட முடியும்:**

- தாக்குதல், உடல் ரீதியாகத் தீங்கு இழைக்கும் தாக்குதல்
- பாலியல் ரீதியான தாக்குதல், உடல் ரீதியாகத் தீங்கு விளைவிக்கும் பாலியல் தாக்குதல்
- குற்றம் சார்ந்த தொந்தரவு
- குறும்புச்சேட்டை
- சமாதானத்திற்கான ஒரு பிணைப்பு அல்லது ப்ரோபேஷன் ஆணை போன்ற நீதிமன்ற பாதுகாப்பு ஆணையை மீறுதல்

## துஷ்பிரயோக வடிவங்கள்

**தனிமைப்படுத்தல் மற்றும் புறக்கணிப்பு:**

- நண்பர்கள் குடும்பத்தாருடன் உங்களது சமுதாயத் தொடர்பினை கட்டுப்படுத்துவது
- உங்களுக்குச் சொந்தமான உடைமைகளை நீங்கள் அணுகுவதைக் கட்டுப்படுத்துவது

**பொருளாதார ரீதியிலான மற்றும் நிதி ரீதியிலான துஷ்பிரயோகம்:**

- உங்கள் விருப்பப்படி வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு உங்களை அனுமதிக்காதிருப்பது
- நிதி ரீதியிலான விஷயங்கள் எதிலும் நீங்கள் கூறும் கருத்துகள் எதையும் அனுமதிக்காதிருப்பது

**உடல் ரீதியான துஷ்பிரயோகம்:**

- அடிப்பது, தாக்குவது, முரட்டுத்தனமாகக் கையாள்வது
- குலுக்குவது, கன்னத்தில் அடிப்பது, தள்ளி விடுவது
- மூச்சுத் திணறச் செய்வது, கடிப்பது, உதைப்பது
- கட்டாயப்படுத்தி அடைத்து வைப்பது
- உடலுறவுக்கு வருமாறு உங்களைக் கட்டாயப்படுத்தவது

**உணர்வு ரீதியான மற்றும் உளவியல் ரீதியான துஷ்பிரயோகம்:**

- உங்களது குடும்பத்து உறுப்பினர்கள், நண்பர்கள், சக-பணியாளர்கள், மற்றும் உங்கள் குழந்தைகளின் எதிரே உங்களை அவமானப்படுத்துவது
- உங்களது கலாச்சார நம்பிக்கைகளை இழந்து விட்டதாகவும் “மேற்கத்தியப் பாணியில்” இருப்பதாகவும் உங்களிடம் கூறுவது
- உங்களது அறிவுக்கூர்மையை அவமதிப்பது
- அவரது விருப்பங்களுக்கு நீங்கள் கீழ்ப்படியவில்லை என்றால் உங்களையும் உங்களது குழந்தைகளையும் விட்டு விலகிச் செல்லப் போவதாக அச்சுறுத்துவது
- குழந்தைகளை அழைத்துச் செல்லப் போவதாக அச்சுறுத்துவது

## பெண்களின் உரிமைகள்

1. கனேடியச் சட்டத்தின் கீழ், பெண்களுக்கு எதிரான வன்முறை சட்டத்திற்கு எதிரானது ஆகும். துஷ்பிரயோகம் செய்யப்படும் பெண்கள், தங்களுக்காகவும் அவர்களது குழந்தைகளுக்காகவும் உள்ளூர் வசிப்பிடங்களில் உதவியை நாட முடியும்.

2. துஷ்பிரயோகம் செய்யப்படும் திருமணத்தில் இருந்து விலகிச் செல்லும் பெண், அரசினால் அளிக்கப்படும் நிதி உதவிக்குத் தகுதி பெற முடியும்.

3. குடும்பச் சட்டத்தின் கீழ் கனடாவில் பிறந்த பெண்களைப் போன்றே குடியேறிய பெண்களுக்கும் அதே உரிமைகள் மற்றும் பொறுப்புகள் உள்ளன. நீங்கள் பிரிந்து போவதைத் தேர்வு செய்தால், பிரியும் பொழுது உங்களது குடும்பத்து சொத்தில் ஒரு பாகத்தை வழங்கும்படி நீதிமன்றத்திடம் நீங்கள் கேட்க முடியும். *http://www.onefamilylaw.ca/en/familylawissues/*

4. நீங்கள் ஒரு பிரஜையாகவோ, நிரந்தர வசிப்பாளராகவோ அல்லது குடியேறிய இமிக்ரன்ட் என்றாலோ, உங்களைத் துஷ்பிரயோகம் செய்யும் நபரால் தான் நீங்கள் ஸ்பான்சர் செய்யப்பட்டீர்கள் என்றாலும் கூட, துஷ்பிரயோக சூழலை விட்டு விலகியதற்காக உங்களைக் கனடாவில் இருந்து வெளியேற்ற முடியாது.